# கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிப்போருக்கான அறிவுரைகள்
## (இது விண்ணப்பப்படிவத்துடன் இலவசமாக வழங்கப்படும்)

(தயவு செய்து விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் அனைத்து அறிவுரைகளையும் வாசிக்கவும்.)

**1. விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுரைகள் :**

(i) இறுதியாகப் பெற்றுக் கொண்ட பிரயாண ஆவணங்களின் (கடவுச்சீட்டு/அவசரகாலச் சான்றிதழ்/ஆளடையாள சான்றிதழ்) இலக்கத்தை இங்கு எழுதவும். உள்நாட்டில் காணாமல் போயிருந்தால் பொலீசில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி அல்லது வெளிநாடு ஒன்றில் காணாமல் போயிருந்தால், இலங்கைக்கு வருவதற்காகப் பாவித்த தற்காலிகப் பிரயாண ஆவணங்களின் நிழற்பிரதி ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். (முதன் முறையாக விண்ணப்பிப்போருக்கு இது ஏற்புடையதாகாது.)

(ii) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிடவும். 16 வயதிற்கு மேற்பட்ட சகலரும் தமது அடையாள அட்டையின் நிழற்பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) உங்கள் பெயரின் முதலெழுத்தை (பரம்பரைப் பெயர்) ஒரு கூட்டுக்குள் ஒரு எழுத்து என்ற முறையில் எழுதவும். பெயர்களுக்கிடையில் ஒரு கூட்டை வெறுமையாக விடவும்.

* விண்ணப்பதாரியின் கணவரின் பெயரை முதலெழுத்தாகப் பாவித்து கடவுச்சீட்டைப் பெற்றுக் கொண்டால் விவாகத்தின் பின் மாற்றப்பட்ட பெயரை எழுதவும். (இங்கே விவாக சான்றிதழின் நிழற்பிரதி ஒன்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.)

(iv) இலக்கம் 3 இன் கீழ், கூடுகளினுள் எழுதப்பட்ட உங்கள் முதற்பெயரைத் தவிர்த்து, உங்கள் முழுப்பெயரின் மிகுதியை இக்கூட்டினுள் எழுதவும்.

(v) உங்கள் நிரந்தர முகவரியை இங்கு எழுதவும்.

(vi) பிறந்த திகதி (பிறப்புச் சான்றிதழின்படி)

(vii) பிறப்புச் சான்றிதழின் இலக்கமும் மாவட்டமும் (பிறப்புச் சான்றிதழின் நிழற்பிரதியொன்றை ஒப்படைக்கவும்).

(viii) பிறந்த இடம், பிறப்புச் சான்றிதழில் குறிப்பிட்டபடி குறிப்பிடவும்.

(ix) சம்பந்தப்பட்ட கூட்டினுள் " ✓ "என்று குறிப்பிடவும்.

(x) உங்கள் உயரத்தை சென்றிமீற்றர்களில் குறிப்பிடவும். (ஒரு அடி 30.4 சென்ரி மீற்றர்களாகும். ஒரு அங்குலம் 2.54 சென்ரி மீற்றர்களாகும்)

(xi) சம்பந்தப்பட்ட கூடுகளில் " ✓ " என்று குறிப்பிடவும்.

(xii) உங்கள் வாழ்க்கைத் தொழில்/நிலை அல்லது பதவியை இங்கு எழுதவும். சொற்களிடையே ஒரு கூட்டை வெறுமையாக இடவும். (தொழில் பற்றி உறுதிப்படுத்திய கல்விச் சான்றிதழ்/தொழிற்சான்றிதழ்/ தொழிலை உறுதிப்படுத்திய மூலப்பிரதியின் நிழற் பிரதியையும் முன்வைக்கவும்.)

(xiii) உங்கள் கடவுச் சீட்டுக்கு உட்படுத்தப்பட்ட பிள்ளைகளின் தொகையை எழுதவும்.

(xiv) நீங்கள் வெளிநாடொன்றின் பிரஜாவுரிமையை அல்லது இலங்கையின் இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றிருந்தால் சம்பந்தப்பட்ட கூட்டில் "✓" என்று குறிப்பிடவும். இலங்கையின் இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றிருந்தால் சான்றிதழின் நிழற்பிரதியொன்றினைச் சமர்ப்பிக்கவும்.

(xv) தேவைப்பட்ட கடவுச் சீட்டின் வகை : (1) சகல நாடுகளிற்கும் (2) மத்திய கிழக்கு நாடுகள் உட்பட குறிப்பிட்ட நாடுகள் - இந்தியா, நேபாளம், பங்களாதேசம், பாகிஸ்தான், மாலைதீவுக் குடியரசு, ஈரான், ஈராக், லெபனான், சிரியா, ஜோர்தான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், ஓமான், குவைத், கட்டார், பஹ்ரெய்ன் மற்றும் யெமன் ஆகிய நாடுகளிற்காகவும் (3) அவசரகாலச் சான்றிதழ் - இந்தியா மற்றும் நேபாளம் ஆகியவற்றுக்காகவும் (4) ஆளடையாளச் சான்றிதழ் சகல நாடுகளுக்கும் அல்லது குறிப்பிட்ட நாட்டுக்குச் செல்லுபடியாகக் கூடியதாகவும் வழங்கப்படும். சம்பந்தப்பட்ட கூடுகளில் "✓" என்று குறிப்பிடவும்.

(xvi) அவசர வேலைகளில் உங்களுடன் தொடர்பு கொள்ள தொலைபேசி இல. ......, ஈ - மெயில் இல. ............ இருப்பின் குறிப்பிடவும்.

(xvii) கடவுச் சீட்டு விண்ணப்பப்பத்திரத்தில் சான்றுக் கையொப்பம் இட முடியுமானவர்களின் விபரம் மறுபக்கம் உள்ளது.

**2. நிழற்படம் (PHOTO)**

(i) சென்ரிமீற்றர் 3.5 × 4.5 அளவில் 3 வர்ண நிழற்படங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) இந்நிழற்படங்களின் பளபளப்பு அல்லது பாதிப்பளபளப்பு அற்ற நிழற்படங்களாக இருத்தல் வேண்டும்.

(iii) நிழற்படத்தில் முகம் நேராக இருத்தல் வேண்டும் என்பதுடன் காதுகள் இரண்டும் தெளிவாகத் தெரிதல் வேண்டும்.

(iv) நிழற்படம் மிகவும் தெளிவாகவும் நல்ல தரமானதாகவும் இருத்தல் வேண்டும்.

(v) நிழற்படங்கள் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கு மூன்று மாதங்களிற்குள் எடுத்தவையாக இருத்தல் வேண்டும்.

**3. பெற்றோர்களின் கடவுச்சீட்டுக்களில் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்வதற்கான விபரங்களும் அறிவுரைகளும் :**

(i) அதற்காக க.சீ. 35 'சீ' பத்திரத்தின் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

(ii) பிள்ளைகளின் பெயர்களை அவர்களுடைய பெற்றோர்களுடைய கடவுச் சீட்டுக்களில் சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பிக்கும் போது அவர்களின் வயது 16 வயதிற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(iii) பெற்றோர்களின் கடவுச்சீட்டுக்களில் பிள்ளைகளின் பெயர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் அவற்றின் நிழற்பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றின் மூலப் பிரதிகள் திருப்பி அனுப்பப்படும்/ திருப்பித் தரப்படும் :-

(1) விண்ணப்பதாரியின் கடவுச்சீட்டு.

(2) பெயர் சேர்க்கப்பட வேண்டிய பிள்ளையின்/ பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்.

(3) விண்ணப்பதாரியின் கடவுச்சீட்டில் பிள்ளை/பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்காக வாழ்க்கைத் துணையின் விருப்பத்தை தெரிவிக்கும் கடிதம்

(4) வாழ்க்கைத் துணையின் கடவுச்சீட்டில் பெற்றோரின் தரவுப் பக்கமும் மற்றும் பிள்ளைகள் சேர்க்கப்பட்ட பக்கமும் (வாழ்க்கைத் துணையினால் கடவுச்சீட்டு பெற்றிருக்காது இருந்தால் அதனைத் தெளிவுபடுத்தும் சத்தியக் கடதாசியும் அடையாள அட்டையின் நிழற் பிரதி ஒன்றும்)

(5) வாழ்க்கைத் துணை இறந்திருந்தால் மரணச் சான்றிதழ்

(6) விவாகரத்துப் பெற்றிருந்தால் விவாகரத்துச் சான்றிதழ்

(iv) பிள்ளையின் பெயர்களைக் கடவுச்சீட்டில் சேர்த்துக்கொள்ளும் போது சம்பந்தப்பட்ட பிள்ளையின் வர்ணப்படங்கள் (2) இரண்டு விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அந்நிழற் படம் 2.5 செ.மீ. × 3 செ.மீ. அளவில் இருத்தல் வேண்டும். பிள்ளைகளின் நிழற்படப் பிரதிகளை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி வலதுபக்க நிழற்படத்தை 7 ஆம் இலக்கத்தில் உள்ள ஒருவரினால் உறுதிப்படுத்த வேண்டும்.

1A -CM008724-1,50,000(2008/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்

(V) புதிதாகக் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும்போது, அந்த நேரத்திலேயே பிள்ளைகளின் பெயரும் அதில் சேர்த்துக்கொள்ளப்படுமானால் அதற்காக மேலதிகக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. ஆனால், தற்போதுள்ள கடவுச்சீட்டில் பிள்ளைகளின் பெயர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமானால் அல்லது அகற்றப்பட வேண்டுமானால், திருத்தக் கட்டணமாக ரூபா 250 செலுத்துதல் வேண்டும்.

**4. பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்கள் :**

(i) க. சீ. 35 'சே' விண்ணப்பப்பத்திரம்

(ii) பிறப்புச்சான்றிதழின் மூலப்பிரதி (நிழற்படப் பிரதியுடன்) - (ஆங்கில மொழிபெயர்ப்புப் பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)

(iii) பெற்றோரின் கடவுச்சீட்டுக்களின் தரவுப் பக்கத்தின் நிழற்பிரதி ஒன்றும் பிள்ளைகளின் புகைப்படப்பிரதியின் (பக்க இல. 6) குறித்த கடவுச்சீட்டும்

(iv) பெற்றோர்கள் கடவுச்சீட்டுக்கள் பெற்றிருக்காவிட்டால் அவர்கள் கடவுச்சீட்டுக்கள் பெற்றிருக்கவில்லை என்ற சத்தியக் கடதாசி ஒன்றும் பெற்றோர்களின் அடையாள அட்டைகளின் நிழற்படப் பிரதி ஒன்றும்

(v) பிள்ளைகளுக்குத் தனியாகக் கடவுச்சீட்டு ஒன்று பெற்றுக் கொடுத்தல் சம்பந்தமாக பெற்றோரின் விருப்பக் கடிதம் (தாய், தந்தை அல்லது இருவரும் வெளிநாட்டில் இருந்தால் அவர்களின் விருப்புக் கடிதம் பெக்ஸ் மூலமாக முன்வைக்க வேண்டும்.)

(vi) தாய் அல்லது தகப்பன் இறந்திருந்தால் மரணச் சான்றிதழின் நிழற்பிரதியுடன்

(vii) தாய் அல்லது தகப்பன் விவாகரத்துப் பெற்றிருந்தால் விவாகரத்துச் சான்றிதழின் நிழற்பிரதி ஒன்றும்.

(viii) பிள்ளைகளுக்குத் தனியாகக் கடவுச்சீட்டுப் பெற்றுக்கொள்வதற்கு முன் அப்பிள்ளைகள் தங்கள் தாய் அல்லது தகப்பனின் செல்லுபடியாகும் கடவுச்சீட்டில் சேர்க்கப்பட்டிருக்குமாயின் அது முதலில் நீக்கப்படுதல் வேண்டும். க. சீ. 32 'சீ' விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கான கட்டணமாக 250 ரூபா அறவிடப்படும்.

(ix) சென்றிமீற்றர் 3.5 X 4.5 அளவில் 03 வர்ண நிழற்படங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**5. கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காகக் கீழ்க் குறிப்பிடப்பட்ட தவறுகள் 1948 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின்படி தண்டனை கிடைக்கக் கூடிய குற்றங்கள் என்று ஞாபகப்படுத்துகின்றோம்.**

(i) தவறான விபரங்களை வழங்குதல்.

(ii) போலியான அல்லது தவறான ஆவணங்களைச் சமர்ப்பித்தல்.

(iii) செல்லுபடியாகக் கூடிய பிரயாண ஆவணங்களை வைத்துக் கொண்டு இன்னுமொரு கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தல்.

(iv) மற்றவர்களுடைய கடவுச்சீட்டைப் பயன்படுத்தல்.

(v) பெற்றுக் கொண்ட கடவுச்சீட்டைப் போலியானதாக மாற்றுதல்.

(vi) மற்றவர்களுடைய ஆவணங்களைச் சமர்ப்பித்து கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளுதல்.

**6. கடவுச்சீட்டு காணாமற் போன சந்தர்ப்பங்களில் :**

(i) காணாமற் போனது சம்பந்தமாக பொலிசில் செய்த முறைப்பாட்டு அறிக்கையின் மூலப் பிரதி.

(ii) கடவுச்சீட்டு வெளிநாட்டில் காணாமல் போயிருந்தால் அந்நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த தற்காலிகப் பிரயாண ஆவணம்.

(iii) கடவுச்சீட்டுப் பெற்றுக் கொள்வதற்கான பணத்தைத் தவிர தண்டனைப்பணம் ரூபா. 10,000 (இத்தண்டனைப் பணம் அறவிடுவது கடவுச்சீட்டு 10 வருட செல்லுபடியாகும் கால எல்லைக்கு உட்பட்டிருந்தால் மட்டுமே ஆகும்).

**7. கடவுச்சீட்டை உறுதிப்படுத்தக் கூடியவர்கள் :**

(i) இலங்கை நிருவாக சேவையில்/ கல்வி நிருவாக சேவையில்/ பொறியியலாளர் சேவையில்/ கணக்காளர் சேவையில்/ திட்டமிடல் சேவையில் உள்ள அலுவலர் ஒருவர்.

(ii) குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தில் உத்தரவு பெற்ற அதிகாரி ஒருவர்.

(iii) வழக்கறிஞர்.

(iv) தகைமை பெற்ற வைத்தியர் ஒருவர்.

(v) காலாட்படை, கடற்படை, விமானப்படை, பொலிஸ் ஆகிய பிரிவுகளில் நிறைவேற்று அதிகார தரத்தையுடைய அலுவலர் ஒருவர்.

(vi) பிரதேச பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பரிட்சகர் (பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி).

(vii) பிரதேச சமுர்த்தி முகாமையாளர்/ கிராம உத்தியோகத்தர்/ சமூக சேவை அலுவலர்.

(viii) தபாலதிபர்/ பாடசாலை வித்தியாலய அதிபர்/ தொழில் உத்தியோகத்தர்.

(ix) தோட்ட அதிகாரி.

(x) சமாதான நீதவான்.

**8. கட்டணங்கள் :**

| | ஒருநாள் சேவை | சாதாரண சேவை |
|---|---|---|
| (i) சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டு | ரூபா 7,500 | ரூபா 2,500 |
| (ii) மத்திய கிழக்கு நாடுகளை உள்ளடக்கிய குறிப்பிட்ட நாடுகளுக்கான கடவுச்சீட்டு | ரூபா 2,500 | ரூபா 1,000 |
| (iii) இந்தியா மற்றும் நேபாளம் ஆகியவற்றுக்கான அவசரகாலச் சான்றிதழ் | | ரூபா 500 |
| (iv) சகல நாடுகளுக்குமான ஆளடையாளச் சான்றிதழ் | ரூபா 2,500 | |

(v) சகல கட்டணங்களிலும் மாற்றத்திற்கு இடமுண்டு.

**9. பௌத்த மதகுருமாருக்கான கடவுச்சீட்டு :**

(1) பிறப்புச் சான்றிதழுடன் அடையாள அட்டை.

(2) சாமணேர பிக்கு சான்றிதழ் அல்லது உபசம்பதா சான்றிதழ் கட்டாயமானது.

**கவனிக்க .-** ஒருநாள் சேவைக்கான கடவுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தைக் கையளித்து பணம் கொடுப்பனவு செய்த நேரத்திலிருந்து மூன்று (3) மணித்தியாலங்களுக்குள் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.